சர்வதசே அன்னையர் பிரார்த்தனை கூழு

அடிப்படை கொள்கைகளும் வழிகாட்டி நெறிமுறைகளும்

மூல நம்பிக்கைகள்

நாங்கள் அனைவரும் Moms in Prayer International-லின் விசுவாசக் கூறுபாட்டைப் பின்பற்றுகிறோம்; அதாவது, இயேசுவை இரட்சகரும் ஆண்டவருமாக தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வதும், இயேசு தான் தேவன் என்பதையும் நம்புகிறோம்.

ஜெபத்தின் மூலம், நம் குழந்தைகள் மற்றும் பள்ளிகளுக்காக தேவன் தமது வல்லமையை வெளிப்படுத்துகிறார் என்று நாங்கள் நம்புகிறோம். எங்கள் ஜெபங்களை கேட்டு பதிலளிக்கும் தேவன் மேல் எங்கள் விசுவாசம் இருக்கிறது.

முக்கிய நோக்கங்கள்

ஊழிய அறிக்கை: *Moms in Prayer International மூலம் உலகம் முழுவதும் உள்ள தாய்மார்களை ஒன்றுகூடி ஜெபிக்கச் செய்து, கிறிஸ்துவுக்காக குழந்தைகள் மற்றும் பள்ளிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.*

தரிசன அறிக்கை: *உலகிலுள்ள ஒவ்வொரு பள்ளியும் ஜெபத்தால் மூடப்பட்டிருக்க வேண்டும் என்பதே எங்கள் தரிசனம்.*

முக்கிய முன்னுரிமைகள்

- முதலாவதாக தேவன்
- இரண்டாவதாக குடும்பம்
- மூன்றாவதாக ஊழியம்

அடிப்படை வடிவமும் முறையும்

- ஒருமனதோடு ஜெபித்தல்
- ஜெபத்தின் நான்கு படிகள்
- வேதாகமத்தின்படி ஜெபித்தல்
- குறிப்பிட்டு ஜெபித்தல்
- சுவிஷேச ஜெபம்

வழிகாட்டு நெறிமுறைகள்

நாங்கள் தேவனுக்கு அடிமைகளாகவும், வழிகாட்டுதலுக்கும் உதவிக்கும் அவரையே சார்ந்தவர்களாகவும் இருக்கிறோம்.

சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்குறித்தே மேன்மைபாராட்டுவோம். சங்கீதம் 20:7

நாங்கள் ஒரு சீஷத்துவ மற்றும் வளர்ச்சியின் ஊழியத்தை செய்கிறோம்

சீஷத்துவம் - எப்படி ஜெபிக்க வேண்டும் மற்றும் எப்படி தேவன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று பெண்களுக்கு கற்றுக்கொடுத்தல்

வளர்ச்சி- ஒருவொரு பள்ளிக்காகவும் ஜெபிக்கிற ஒரு குழுவை ஆயத்தம் செய்வது

தேவன் எங்களை Moms in Prayer மூலபாக சேவை செய்ய அழைத்திருக்கிறார்.

நாங்கள் இந்த ஊழியத்தையும் அதன் தரிசனத்தையும் அன்போடும் மற்றும் நேர்மையாகவும் வெளிக்காட்ட பொறுப்புடையவர்களாக உள்ளோம்.

தேவபக்தியும் கிருபையும் நிறைந்த, விமர்சனமற்ற ஆவியுடன் வளர்த்து, உற்சாகப்படுத்தி, ஆயத்தப்படுத்துகிறோம்; வேதாகமப் பெண்மைக்காகவும், பாலியல் பரிசுத்ததிற்காகவும் எடுத்துக்காட்டாக நிற்கிறோம்.

ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் இடையேயான உடன்படிக்கைக் கொண்ட தேவனால் நிறுவப்பட்ட வேதாகமத் திருமணத்தை நாங்கள் உறுதியாக நம்பி ஆதரிக்கிறோம்.

தாய்மார்களுக்கு உற்சாகமும் நம்பிக்கையும் அளிக்கும் செய்தி எங்களிடம் உள்ளது.

குழுவில் ஜெபிக்கப்படும் விஷயங்கள் குழுவிலேயே இருக்க வேண்டும் என்பதான ஒரு கடுமையான இரகசிய கட்டுப்பாட்டை நாங்கள் கடைபிடிக்கிறோம்.

குழந்தைகள் மற்றும் பள்ளிகளுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

நாங்கள் ஒரு அரசியல் இயக்கம் அல்ல: எப்பேற்பட்ட நல்ல விஷயமாக இருந்தாலும் Moms in Prayer International தனது செல்வாக்கை அதில் செலுத்தாது. வெளிப்புற அரசியல் மற்றும் சமூக விஷயங்களில் ஈடுபடுவது தனிநபரின் விருப்பத்திற்கே உரியது. எந்த நிலையிலும் Moms in Prayer International என்ற பெயர் வெளிப்புற சமூகக் காரணங்களுடன் இணைக்கப்படக்கூடாது.

எங்கள் நிதி ஆதரவாளர்களுடன், தேவனுக்கு முன்பாக மிக உயர்ந்த தொழில்முறை தரமான சத்தியம், துல்லியம் மற்றும் ஒழுக்கத்துடன் தொடர்புகொள்வோம்.